# நாட்டார் வாழ்வியல்



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. கலாவதி

முனைவர் சு. குமரன்

# நாட்டார் வாழ்வியல்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


பதிப்பாசிரியர்கள் : **முனைவர் க. கலாவதி**
**முனைவர் சு. குமரன்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : டிசம்பர், 2017

வெளியீடு : **தமிழ்த்துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்**
**மகளிர் உயர்கல்வி நிறுவனம்**
கோயம்புத்தூர் - 43.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் : 18 + 368 = 386

விலை : உரூ. 300/-

**ISBN : 978 - 93 - 85267 - 44 - 4**


## Aspects of Prosperous life in Folklore


Editor's : **Dr. G. Galavathi**
**Dr. S. Kumaran**

Copyright's : Editors

First Edition : December, 2017

Published : **Department of Tamil**
**Avinashilingam Institute for Home**
**Science and Higher Education for**
**Women,** Coimbatore - 43.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : 18 + 368 = 386

Prize : **Rs. 300/-**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | **முனைவர் க. கலாவதி**<br>சிறப்பு வழிபாட்டு முறை -கொடைவிழா | 1 |
| 2. | **வி. கலைவாணி**<br>சிலப்பதிகாரத்தில் நாட்டாறு வாழ்வியல் | 10 |
| 3. | **பா. கிருத்திகா**<br>புறநானூற்றில் நடுகல் வழிபாடு | 16 |
| 4. | **வீ. நதியா**<br>அகநானூற்றில் நாட்டுப்புறவியல் தாக்கம் | 22 |
| 5. | **திருமதி பா. நளினிப்ரியா**<br>இலக்கியங்களில் சிறுதெய்வ வழிபாடு | 28 |
| 6. | **மா. மஞ்சுளா**<br>நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளும்<br>அறிவியல்சார் உண்மைகளும் | 32 |
| 7. | **முனைவர் சி. இலட்சுணன்**<br>நாட்டுப்புற நம்பிக்கைகளும் மாந்திரீகச் சுவடிகளும் | 36 |
| 8. | **தி. பிரகாசி மேரி**<br>நாட்டார் கைவினைப் பொருட்கள் | 42 |
| 9. | **திருமதி இரா. சண்முகப்பிரியா**<br>நாட்டுப்புறக் கதைகள் | 46 |
| 10. | **முனைவர். வே. தனுஜா பாலவார்**<br>இனமக்களின் வாழ்வியல் முறைகள் | 52 |
| 11. | **முனைவர் தா. லிற்றில்மேரி**<br>நாகர் அம்மன் கதைப்பாடல் காட்டும்<br>வாழ்வியல் புனைவுகள் | 58 |
| 12. | **முனைவர் க. முருகேசன்**<br>நாட்டுப்புறத் தெம்மாங்குப் பாடல்களில்<br>உறவுகளும் உணர்வுகளும் | 63 |
| 13. | **முனைவர் சு. சதீஷ்குமார்**<br>நாட்டுப்புறவியல் ஆய்வு நூல்களின் முன்னோடி<br>எங்கள் நாட்டுப்புறம் | 71 |
| 14. | **அ. ரஞ்சனி**<br>அருள்மிகு மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும் | 78 |
| 15. | **உ. சசிகலா**<br>கருவாச்சி காவியத்தில் நாட்டார் வாழ்வியல் | 83 |

12

# நாட்டுப்புறத் தெம்மாங்குப் பாடல்களில் உறவுகளும் உணர்வுகளும்

**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

எட்டில் எழுதா இலக்கியங்களாகப் பரிணமித்து மக்களின் உள்ளங்களில் மறையாத ஒளிப்பிளம்புகளாகத் திகழக்கூடிய சிறப்புப் பெற்றவை நாட்டுப்புறப் பாடல்கள். இருபத்தியோராம் நூற்றாண்டில் எத்தனையோ அறிவியல் முன்னேற்றங்களும் கண்டுபிடிப்புகளும் மனித வாழ்வைப் புரட்டிப்போட்டு வேறுவேறு திசைகளுக்கு இழுத்துச் செல்ல முற்பட்டாலும் அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டுப் புதுப்பொலிவுடன் விளங்கும் நாட்டுப்புற வழக்காறுகளில் தெம்மாங்குப் பாடல்களின் தனித்தன்மைகளைக் கண்டறிந்து மெய்ப்பித்துக் காட்டுவதற்கு கோவை மாவட்டத்தில் கிடைத்த சில பாடல்களைக் களமாகக் கொண்டு இக்கட்டுரை பயணிக்கின்றது.

## தெம்மாங்குப் பாடல்களின் பாடுபொருள்

தமிழ்நாட்டுக் கிராம மக்களால் பெரிதும் விரும்பிப் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்களுள் ஒன்று தெம்மாங்கு. தேன்போல் இனிக்கும் பாடல் என்பதால் தேன்பாங்கு என்பர். தெம்மாங்குப் பாடல்களைப் பாடுவதற்கு இடம் காலம் பற்றிய கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. வண்டி ஓட்டும்போதும், தனிவழியில் நடக்கும்போதும், வயல் வேலைகள் பார்க்கும்போதும், நிலா வெளிச்ச முற்றங்களில் பொழுது போக்கும் போதும் எத்தொழில் புரியும் போதும், இவ்வகைப் பாடலைப் பாடலாம்.

வண்டிக்காரர்கள் பாரமேற்றிக் கொண்டு நெடுந்தூரம் பயணம் போகும்பொழுது இப்பாடல்களைப் பாடுவார்கள். களைப்புத் தெரியாமல் வேலையில் மகிழ்ச்சியோடு ஈடுபடவே அவர்கள் பாடுகிறார்கள். வண்டி ஓட்டிச் செல்லும் இரவு நேரங்களில் தாங்கள் உறங்கிவிடாமல் இருப்பதற்காகவும், வண்டி பாதை மாறிப் போய்விடாமல் பயணிப்பதற்கும் அவர்கள் இந்தப் பாடல்களைப் பாடுகிறார்கள். தன் காதலியோடு திருவிழாக்களுக்கு நடந்து செல்லும் இரவு வேளையில் ஆடவர்கள் மகிழ்ச்சியோடு பாடுவதுண்டு.

தெம்மாங்குப் பாடலின் உட்பொருள் பெரும்பாலும் காதலாகவே இருப்பதால் காதல் பாட்டு என்றே இதனைக் கூறலாம். வெகுசில